பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 21 சனிக்கிழமை 04.06.2022 கதிர் 211

இனி இது ரகசியம் அல்ல!

21 ஆவது அரசமைப்புத் திருத்த விடயத்தில் ஆளும் தரப்புக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் இணக்க நிலைமை வந்திருப்பதாக நேற்று பிரதமர் ரணில் கூட்டிய சர்வ கட்சி கூட்டத்தின் பின்னர் அறிவிக்கப்பட்டது. 2

# ‘21’ வரைவு தொடர்பில் இணக்கம் என அறிவிப்பு

## பிரதமர் தலைமையில் நேற்று நடைபெற்ற சர்வ கட்சிக் கூட்டத்தில் எட்டப்பட்டதாம்



கொழும்பு, ஜூன் 04

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் என்ற பெயரில் அரசினால் முன்மொழியப்பட்ட வரைவில் சில மாற்றங்களைச் செய்வதற்கு உடன்பாடு காணப்பட்டமையை அடுத்து அந்த விடயத்தில் அரசுத் தரப்புக்கும் எதிர்க் கட்சிகளுக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டிருப்பதாக நேற்று தெரிவிக்கப்பட்டது. 03

## தண்ணீர்த் தொட்டியில் விழுந்து மூன்று வயதுச் சிறுமி உயிரிழப்பு

### பூவரசன்குளத்தில் நேற்றுச் சம்பவம்

வவுனியா, பூவரசன்குளம் பகுதியில் நேற்று மதியம் தண்ணீர்த் தொட்டியில் விழுந்து 3 வயதுச் சிறுமி மரணமடைந்துள்ளார் எனப் பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியில் இருந்து தாய் 03

## ஆர்ப்பாட்டத்துக்கு கட்டுப்பாடு விதிப்பு

கொழும்பு கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல வீதிகளுக்கு இன்றைய தினம் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழைவதற்கு தடை விதித்து நீதிமன்ற உத்தரவு ஒன்று பெறப்பட்டுள்ளது.

யோர்க் வீதி, பாங்க் வீதி 2

## சிறுமி மீது துஷ்பிரயோகம் இராணுவச் சிப்பாய் கைது

திறப்பனைப் பகுதியில் உள்ள பாடசாலையொன்றின் ஆசிரியர் ஓய்வறையில் வைத்து சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 24 வயதுடைய இராணுவ வீரர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை ஆசிரியரின் ஓய்வறையில் 2

## வடக்கில் நேற்று மட்டும் 321 கிலோ கஞ்சா மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 04

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று ஒரே நாளில் மட்டும் 321 கிலோ கஞ்சா பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வேலணை, மண்கும்பான் பகுதியில் 141 கிலோ கஞ்சா விசேட அதிரடிப்படையினரால் நேற்று கைப்பற்றப்பட்டது.

மண்கும்பானில் உள்ள ஒரு வீட்டில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருப்பதாக 03

### எக்னெலிகொட வழக்கில்

## இராணுவப் புலனாய்வாளர்கள் 9 பேரின் பிணை அனுமதி ரத்து

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு பிணை வழங்கப்பட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவின் 9 பேரையும் மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு 2

## மீள்வது கடினம் ரணில் எச்சரிப்பு



கொழும்பு, ஜூன் 04

இலங்கைக்கு வெளியில் இருந்து சில பில்லியன் (நூறு கோடி) டொலர்கள் தேவை. இல்லையெனில் இலங்கையால் மீள முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 03

## மல்வானை பங்களா வழக்கில் பஸிலும் நடேசனும் விடுதலை

மல்வானை சொத்துக் குவிப்பு வழக்கில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் அவரது உறவினர் திருக்குமார் நடேசன் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா மேல் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை நேற்று வழங்கியது.

தொம்பே, மல்வான, மாபிட்டிகம பிரதேசத்தில் 16 ஏக்கர் காணியை கொள்வனவு செய்து பெரிய வீடு, நீச்சல் தடாகம் மற்றும் பண்ணை ஒன்றை நிர்மாணித்து, அரச நிதியை முறைகேடாக பயன்படுத்தினர் என பசில் ராஜபக்ஷ மற்றும் திருக்குமார் நடேசன் ஆகியோருக்கு 2

## வங்கி முகாமையாளரான பெண் மீது கத்திக் குத்து

பிபில, ஹெவல்வெல பிரதேசத்தில் கூட்டுறவு வங்கியின் முகாமையாளரான பெண்மணி ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு படுகாயமடைந்துள்ளார். அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முகத்தை முழுமையாக மறைத்திருந்த இனந்தெரியாத நபர் ஒருவர் அவரைக் கத்தியால் குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேக நபரைத் தேடி பிபில பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## குஞ்சர்கடை விபத்தில் மாணவன் உயிரிழப்பு

வடமராட்சி குஞ்சர்கடைப் பகுதியில் நேற்றுக் காலை 10.00 மணியளவில் ஏற்பட்ட விபத்தில் 17 வயதுடைய மாணவன் ஒருவன் உயிரிழந்தான். மற்றுமொரு மாணவன் காயமடைந்துள்ளான்.

யாழ் வடமராட்சி, கரவெட்டி, குஞ்சர் கடை மண்டான் வீதியில் மோட்டார் சைக்கிளில் இரு மாணவர்கள் சென்று கொண்டிருந்த போது 03

## பாணந்துறையில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை



பாணந்துறை உயன்கெலே நிர்மலா மாவத்தையில் நேற்று மதியம் 12.45 அளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இரண்டு பிள்ளை 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எனக்கு என்னவோ அப்படி ஓர் இணைக்கம் ஏற்பட்டதாகப் படவில்லை. இவ் விடயத்தில் பிரதமர் ரணில் தெரியாமல் போய்மாட்டியிருக்கின்றார் என்றே தோன்றுகின்றது. மொட்டுக் கட்சியின் கால்வாரல் தந்திரோபாயம் எப்படி வியூகம் வகுத்து நிலைப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில சமயங்களில் அடுத்த வாரத்தில்தான் நேரடியாகப் படிக்க நேரும் என்று மனதில் படுகின்றது.

நேற்று சர்வ கட்சி கூட்டத்தில் எட்டப் பட்டவை எனக் கூறப்படும் தீர்மானங்கள் அல்லது இணக்கங்கள் இனி குழம்புவதற்கு இரு இடங்கள் உள்ளன.

ஒன்று – திருத்த வரைவு நாளை மறுதினம் அமைச்சரவைக்கு அங்கீகாரத்துக்கு வரும் போது.

அடுத்தது – அது இறுதியில் நாடாளுமன்றத்திற்கு வரும் போது அங்கு.

இந்த 21 ஆவது திருத்தத்தில் இப்போது இணங்கப்பட்டதாகக் கூறப்படும் வரைவின்படி இரட்டைப் பிரஜா உரிமை பெற்றவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியாது. 19 ஆவது திருத்தத்தில் இருந்த அந்த விடயம் 21 ஆவது திருத்த வரைவில் அப்படியே வந்துள்ளது. இது சட்டமானால் பஸில் ராஜபக்ஷவுக்கு அதனால் பாதிப்பு என்ற காரணத்தினால் 21 ஆவது திருத்தத்தை அந்த வடிவத்தில் ஆளும் பொதுஜன பெரமுன அனுமதிக்காது என்று செய்திகள் ஆரம்பத்தில் வெளிவந்தன.

அப்படியல்ல, பஸில் அதனை எதிர்க்க மாட்டார், அந்த விடயத்தைப் பேரம் பேசுவதற்கான துரும்பாகக் கையாண்ட பின்னர், அதனை விட்டுக் கொடுத்து விடுவார் என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

நேற்று சர்வகட்சி கூட்டத்திலும் அந்த விடயம் அப்படியே இருப்பது எதிர்ப்பின்றி 'பாஸ்' பண்ணி விட்டது. நேற்றைய கூட்டத்தில் பிரதமர் ரணிலுடன் அரசுத் தரப்பில் முன்னிலையாகி இருந்த அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், தினேஷ் குணவர்த்தன போன்றோர் கூட இவ்விடயத்தை எதிர்க்கவில்லை.

ஆக,நான் நேற்று கூறியது இன்றே சரியாகி விட்டமை உறுதியாகி விட்டது என நான் புளகாங்கிதம் அடையலாம். ஆனால் அதுவும் தப்பு என்றே தோன்றுகின்றது.

நேற்றைய சர்வகட்சி கூட்டத்தில் நடந்த ஒழுங்குகள் அப்படி ஒரு சந்தேகத்தைத்தான் எனக்குத் தந்திருக்கின்றன.

நேற்றைய கூட்டத்திற்கு எதிரணித் தரப்புகளில் இருந்து பல கட்சிகளின் பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

ஆனால் ஆளும் தரப்பில் – அரசுத் தரப்பில் – இருந்து அமைச்சர்கள் பீரிஸ், தினேஷ் குணவர்த்தன ஆகிய இரண்டு பேர்தான். கூட்டத்திற்குத் தலைவராக பிரதமர் ரணில் இருந்தார்.

நேற்றைய கூட்டத்தில் மொட்டுத் தரப்பில் கருத்துக் கூற வேண்டிய இந்த இரண்டு அமைச்சர்களும் அதிகம் பேசவில்லை. ஏன் ஏதும் பேசவில்லை, வாயே திறக்கவில்லை என்றும் கூறலாம். வெறுமனே நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார்கள். கடைசியில் யாரேனும் அவர்களின் பெயர் சுட்டிக் கேள்வி எழுப்பினால் பிரதமர் பக்கம் கையைக் காட்டிவிட்டு மௌனம் பேணினர் இரு அமைச்சர்களும்.

அது மாத்திரமல்ல, இறுதியில் இணக்கங்கள் எட்டப்பட்டமையைக் குறிப்பிட்டு, அவற்றை வரிசைப்படுத்தி, மீளச் சுட்டிக்காட்டி, அறிவிக்கப்பட்டபோது இரண்டு அமைச்சர்களும் கூட்டத்தில் இல்லை. நேரத்துடனேயே நைஸாகக் கழன்று கொண்டிருந்தனர்.

நாளை மறுதினம் அமைச்சரவைக்கோ அல்லது பின்னர் நாடாளுமன்றத்திற்கோ 21 ஆவது திருத்தம் வரும் போது, நேற்றைய சர்வக் கட்சி கூட்டத்தில் இணங்கப்பட்டவை எனக் கூறப்படும் இந்த விடயங்கள் அங்கு எடுக்கப்பட்ட போது நாம் கூட்டத்தில் இல்லை என அமைச்சர்கள் தினேஷும், பீரிஸும் கூறுவர். அது, அங்கு, பிரதமரும் எதிரணியினரும் சேர்ந்து எடுத்த முடிவே தவிர, அதற்கும் ஆளும் தரப்புக்கும் – குறிப்பாக மொட்டுக் கட்சிக்கும் – எந்தத் தொடர்பும் இல்லை என்று என அரச தரப்பும் சேர்ந்து மறுக்க வாய்ப்புகள் உண்டு.

நேற்றைய சர்வகட்சிகளின் கூட்டத்தில் அமைச்சர்கள் தினேஷும், பீரிஸும் ஆளும் தரப்பின் கருத்துக்கள் எதனையும் முன்வைக்காமல் அதீத மௌனம் காத்தமையும், எட்டப்பட்ட முடிவுகள் தீர்மானங்களாக உடன்பாடு காணப்படுவதற்கு முன்னர் இரண்டு அமைச்சர்களும் கூட்டத்தில் இருந்து நைஸாகக் கழன்று ஜகா வாங்கியமையும் மேலும் இந்தச் சந்தேகத்தைத்தான் நமக்குத் தந்து நிற்கின்றன.

எட்டப்பட்ட இணக்கங்கள் நாளை மறுதினம் அமைச்சரவையில் புஸ்வாணம் ஆகலாம். அல்லது நாடாளுமன்றத்தில் அந்த கதி 21க்கு நடக்கலாம்.

இன்னொரு விடயமும் உண்டு.

அரசமைப்புத் திருத்தம் என்ற வகையில் 21 ஆவது திருத்தத்துக்கு முதலாம், இரண்டாம் வாசிப்பின் போது மொட்டுக் கட்சியினரும் சேர்ந்து மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளை வழங்கி அதனை அங்கீகரித்து விட்டு, அதன் பின்னர் அந்த வரைவின் மீது குழுநிலையில் திருத்தங்கள் ஆராயப்படும் போது, இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் எம்.பியாக இருக்க முடியாது என்ற சரத்தை நீக்க வேண்டும் என்று மொட்டு கட்சியினர் திருத்தம் ஒன்றைக் கொண்டுவரலாம். ஏற்கனவே அந்த விடயம் அரசமைப்பில் அப்படியே இருப்பதால் 21 ஆவது திருத்த வரைவில், நாடாளுமன்றத்தில் இறுதிக் கட்டத்தில், அத்தகைய திருத்தத்தை சாதாரண பெரும்பான்மை மூலமே நிறைவேற்ற முடியும், அதற்கு மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் அவசியமல்ல என்பது கவனிக்கத் தக்கது.

அதாவது – இன்னும் சற்று விளக்கமாகச் சொல்வதானால் –

இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் எம்பியாக இருக்க முடியாது என்ற வாசகத்தை இப்போது 21 ஆவது திருத்த வரைவில் உள்ளது போல அப்படியே இருக்க அனுமதித்து விட்டு, அமைச்சரவையிலும் நாடாளுமன்றின் முதல் வாசிப்பிலும் பின்னர் உயர் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும் போதும் வரைவின் வடிவத்தில் அப்படியே இருக்க அனுமதித்து விட்டு –

இரண்டாம் வாசிப்பிலும், அது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், கடைசி நேரத்தில் அதற்குத் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் நாடாளுமன்றத்தில் அங்கத்தவராக இருக்க முடியாது என்ற விடயத்தை மட்டும் அந்த வரைவில் இருந்து கடைசி நேரத்தில் 'நொக்கவுட்' செய்து கொள்ள முடியும்.

அதாவது இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் – இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் பெற முடியாது என்பதை 21 ஆவது திருத்தத்தில் முழுமையாக இடம் பெற அனுமதித்து, இறுதிக்கட்டத்தில் சாதாரண திருத்தம் மூலம் அதனை வெட்டி அகற்றி இப்போதைய நிலை தொடர்வதற்கு மொட்டு கட்சியினர் வியூகம் போடக் கூடும்.

இத்தகைய எந்தக் கீழ்த்தரமான தந்திரத்தையும் செய்யக்கூடிய தகுதி நிலையும் கொண்டவர் பஸில் என்பதால், இப்படி எல்லோரையும் நம்ப வைத்து இறுதிக் கட்டம் வரை 21ஐ நகர்த்திவிட்டு, இறுதிக்கட்டத்தில் தாம் விரும்பாத விடயங்களைத் திருத்தமாக கொண்டு வந்து 'நொக்கவுட்' செய்யும் குரங்குப் புத்தி அரங்கேறினாலும் அரங்கேறலாம்.

இவ்விடயத்தில் பஸில் தரப்பினரின் அதீத மௌனம், இத்தகைய சதித்திட்டம் அவர்கள் மனதில் ஏற்கனவே உள்ளதோ என்ற சந்தேகத்தைத் தான் தந்து நிற்கின்றது.

– மின்னல் –

# மன்னாரில் கடற்படை வெறியாட்டம்; ஏழு மீனவர்கள் வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

மன்னார் – பேசாலையில் இருந்து கடல் தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனால் பாதிக்கப்பட்ட 7 மீனவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பேசாலையில் இருந்து வியாழன் மாலை 3 மணியளவில் கடலுக்குப் புறப்படத் தயரான படகுகளைக் கடற்படையினர் தீவிர சோதனைக்கு உட்படுத்தியபோது கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையே கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இதன்போது கடற்படையினர் மீனவர் ஒருவர் மீது கடும் தாக்குதல் மேற்கொண்டதால் பாதிப்படைந்த மீனவர் பேசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதன்பின்பு மீனவர்கள் கடற்படையினரிடம் மன்னிப்புக் கோரி சமர சத்தின அடிப்படையில் தொழிலுக்குச் சென்றனர்.

இவ்வாறு தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் மாலை 5.30 மணியளவில் தலைமன்னார் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம் அவ்விடத்துக்குப் படகில் வந்த கடற்படையினர் மீனவர்களை மீண்டும் சோதனைக்கு உட்படுத்தியதோடு படகுகளுடன் தீடைக்குக் கொண்டு செல்ல முற்பட்டனர்.

தீடையில் இறக்கிய மீனவர்களை மீண்டும் சோதனை செய்ததோடு உடல் பரிசோதனைகளையும் மேற்கொண்ட சமயம் பேசாலையில் முரண்பாடு ஏற்பட்டபோது பிடிக்கப்பட்ட வீடியோப் படத்தின் மூலம் மீனவர்களை இனங்கண்டு ஆறு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது எனப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றஞ்சாட்டினர்.

தீடையில் தாக்கப்பட்ட 6 மீனவர்களும் ஏனைய மீனவர்களின் உதவியுடன் பேசாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

## மல்வானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

## சிறுமி மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டார் எனச் சிறுமி தனது தாயிடம் கூறியமையை அடுத்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நேரத்தின் பின்னர் சந்தேக நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார் எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## பாணந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

களின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாணந்துறையில் மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த – வாத்துவ, தல்பிட்டிய பகுதியைச் சேர்ந்த – ரந்திக மதுஷான் (வயது 30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் மற்றுமொரு நபருடன் காலி வீதிக்குச் சென்று கொண்டிருந்த போது, மற்றுமொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மற்றைய நபருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கீழே விழுந்துள்ள நிலையில், சுட்டவர்கள் மோட்டார் சைக்கிளைத் திருப்பிக் கொண்டு வந்து காயமடைந்தவர் மீது மீண்டும் துப்பாக்கிச் சூடு மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சம்பவம் தொடர்பில் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்பு விசேட மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு வந்தபோது விசேட மூவரடங்கிய சிறப்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் இதற்கான உத்தரவை பிறப்பித்தனர்.

இந்தப் புலனாய்வு அதிகாரிகள் குழு, வழக்கின் சாட்சியாளர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது என்று ஏற்பட்டுள்ள சந்தேகத்தை அடுத்தே நீதிமன்றம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளியான திருக்குமார் என்பவரின் சாட்சியத்தை மேல் நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு எடுத்த போதே இந்தச் சந்தேகம் எழுந்துள்ளது.

இதனடிப்படையில், சம்பந்தப்பட்ட 9 புலனாய்வு அதிகாரிகளையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ஒன்பது பேரில் கிரித்தல இராணுவ முகாமின் கட்டளை அதிகாரி லெப்டினண்ட் கேணல் ம்மி குமாரரட்ணவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று நீதிபதிகள் அடங்கிய நிரந்தர சிறப்பு மேல் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்து வருகிறது.

## ஆர்ப்பாட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் சத்தம் வீதி உட்பட சில வீதிகளுக்கு நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எந்தவொரு அரச நிறுவனத்திற்கோ அல்லது உத்தியோகபூர்வ இல்லத்திற்கோ நுழைந்து சேதப்படுத்துதல் போன்ற எந்தவொரு சட்டவிரோத செயற்பாடுகளையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



## '21' வரைவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அரசமைப்பிற்கான 21 ஆவது திருத் தச்சட்டமூலம் தொடர்பான இரண்டாவது சர்வக்கட்சி தலைவர்கள் கூட்டம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரதமரின் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் முற் போக்குக் கூட்டணி, அகில இலங்கை மக் கள் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆளும் கட்சி தரப்பில் பிரதமரோடு, அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தனா, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் பிர சன்னமாகியிருந்தனர்.

'21' தொடர்பில் நடைபெற்ற முதலாவது சர்வக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்காதிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நேற்றைய சந்திப்பில் பங்கேற்றது. கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.

21ஆவது திருத்தம் தொடர்பில் அரசினால் முன்மொழியப்பட்ட வரைவில் சில விட யங்களை எதிரணி ஆட்சேபித்திருந்தது.

19ஆவது திருத்தத்தில் உள்ள விட யங்களை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காக இப்போது 21 ஆவது திருத்தத்தைச் சமர்ப்பிப்பதாக அர சுத் தரப்பில் கூறப்பட்டாலும், 19 ஆவது திருத்தத்தில் இருந்த பல முக்கிய விட யங்கள் இந்த 21 ஆவது திருத்த வரைவில் இல்லை என்று எதிரணிகள் சுட்டிக்காட்டின. அவை முக்கியமாக மூன்று விடயங்களை ஆட்சேபித்தன.

### எதிரணியின் ஆட்சேபனைகள்

ஒன்று – பதவியில் இருக்கும் பிரதமரை தம் இஷ்டப்படி ஜனாதிபதி பதவி நீக்குவ தற்கான அதிகாரம் தொடர்ந்து ஜனாதிப திக்கு இருக்கும் நிலைமை உள்ளது. அதை ஏற்க முடியாது.

இரண்டாவது – ஜனாதிபதி தாம் விரும் பிய அமைச்சுக்களை தம்முடன் வைத்தி ருக்கலாம் என்ற ஏற்பாடு 21 ஆவது திருத்த வரைவில் இருக்கின்றமை.

மூன்றாவது – அமைச்சர்களின் நியம னத்தை – யார் யாருக்கு எந்தெந்த அமைச் சுக்களை வழங்குவது என்ற முடிவை – பிரதமரின் ஆலோசனை இல்லாமல் ஜனாதிபதி தம் விருப்பப்படி செய்யலாம் என்று 21 ஆவது திருத்தத்தில் இருக்கின்ற ஏற்பாடு.

### காணப்பட்ட இணக்கம்

இந்த மூன்று விடயங்கள் தொடர்பிலும் பல்வேறு கருத்துகள் பரிமாறப்பட்டு, இறுதி யில் சுமுகமான உடன்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி –

நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடனேயே, பிரதமரை, ஜனாதிபதி பதவி நீக்கம் செய்ய முடியும் என்ற சரத்தை, 21 ஆவது திருத்த வரைவுக்குள் உள்வாங்குவதற்கு நேற் றைய கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடி வெடுக்கப்பட்டது.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம், தனது விருப்பத்துக்கமைய, பிரதமரைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் ஜனாதிபதியிட மிருந்து பறிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தாம் விரும்பிய அமைச் சுக்களை வைத்திருக்க முடியும் என்ற ஏற்பாட்டை இப்போது பதவியில் இருக்கும் இந்த ஜனாதிபதியினுடைய காலத்தில் மட் டும் அவர் பாதுகாப்பு அமைச்சை மாத் திரம் வைத்திருக்கலாம் என்று மாற்று வதற்கு நேற்று முடிவு செய்யப்பட்டது.

அதேபோல அமைச்சர்கள் நியமனத்தி லும் இப்போதைய ஜனாதிபதியினுடைய பதவிக் காலத்தின்போது பதவியில் இருக் கின்றவர் மட்டும் தம்மிஷ்டப்படி அமைச் சுக்களை ஒதுக்கீடு செய்யும் முடிவு எடுப்ப தற்கு அனுமதிப்பது என்றும், அதற்குப் பின்னர் வருகின்ற ஜனாதிபதிகளுக்கு அந்த அதிகாரம் இல்லை என்பதை உறு திப்படுத்தும் விதத்திலும் ஏற்பாடுகளை 21 ஆவது திருத்தத்தில் மாற்றி அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இரட்டைக் குடியுரிமையுடையோர் நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெறு வதைத் தடுக்கும் ஏற்பாடு 21 ஆவது திருத்த வரைவில் இருப்பது குறித்து ஆட் சேபனை எதுவும் நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை.

சர்வஜன வாக்கெடுப்புக்கு வழிவகுக் காத வகையில் 21 ஆவது வரைவை நிறை வேற்றக் கூடியதாக திங்களன்று உத்தேச சட்டமூலத்தை அமைச்சரவையில் முன் வைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

---

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under-mentioned post up to **10.06.2022.**

**Post of Temporary Scientific Assistants**
**"Lee Foundation Endowment for Orthopaedic Surgery - Professorial Surgical Unit Faculty of Medicine, University of Jaffna"**

**Salary scale:** Rs.48, 385 /- (fixed) pm

Qualifications:-
Para-Medical or Science Based Qualified Graduates from the following categories:

**I**
A First or Second Class (Upper Division) in a Special Degree Examination in the relevant field.

**II**
A Second Class (Lower Division) in a Special Degree Examination in the relevant field.

**III**
An ordinary pass in the B.Sc. Special Degree Examination in the relevant field.

**IV**
An ordinary pass in the B.Sc. General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant field.

**Note:** Having an excellent track record on undergraduate research, publications, IT skills, statistical analysis skills, and English Language skills will be given priority.

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format. Applications with scanned copies of all the documents should be sent on or before Wednesday, 15.06.2022 to the following email address: **fomvacancy@univ.jfn.ac.lk.** ***(Application form is available in the Faculty of Medicine website:http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf)***

Prescribed application form downloaded from the website must accompany paid bank slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received by the University after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview. The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

**Registrar**
**University of Jaffna**
**Sri Lanka**
**03.06.2022**

---

## மீள்வது கடினம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் கட்சித் தலைவர்கள் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இருப்பினும், நெருக்கடியை தீர்க்க இது போதுமானதாக இருக்காது என்றும் அவர் கூறினார்.

21 ஆவது திருத்தம் தொடர்பில் நேற் றுக் கட்சித் தலைவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:–

தற்போது, பெட்ரோலுக்கான வரிசை கள் இல்லை. ஆனால் நான் பிரதமரின் வேலையை மட்டுமல்ல, தீயணைப்பு வீரரின் வேலையையும் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வில்லை.

நாடு நெருக்கடியின் தொடக்கத்தில் மட்டுமே உள்ளது. இன்னும் மோசமான நிலை இனித்தான் வரப்போகிறது.

பருவங்களுக்கு போதுமான உரங்கள் இல்லாததால், இலங்கையில் உணவு நெருக்கடி ஏற்படலாம். அடுத்த பருவத் திற்கு உரம் கிடைத்தால், அடுத்த ஆண்டு பெப்ரவரிக்குள் தன்னிறைவு அடைவோம்.

மக்கள் ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட மாட்டார்கள். ஒரு நாளைக்கு இரண்டு வேளை மட்டுமே சாப்பிடும் காலம் வரும்.

உதவிக்காக நட்பு நாடுகளுடன் அர சாங்கம் பேச்சு நடத்தி வருகிறது. அவர் களின் உதவி இல்லாமல் இந்த ஆண்டை இலங்கையால் கடக்க முடியாது.

மற்ற நாடுகள் அனைத்தும் இலங் கைக்கு உதவி செய்வதைத் தவிர்த்த நிலையில் இந்தியா முன்வந்திருப்பது இலங்கைக்கு அதிர்ஷ்டம்.

இலங்கை தனது தவறுகளுக்கு மன்னிப்புக் கோருவதும், ஆதரவிற் காக நண்பர்களுடன் சமாதானம் செய்வதும் அவசியம்.

இலங்கையை இரண்டு நெருக் கடி கள் பாதித்திருக்கின்றன. ஒன்று ஏற் கனவே தொடங்கிவிட்டது. அதுதான் இலங் கையின் பொருளாதார நெருக்கடி.

இரண்டாவது நெருக்கடியானது உக்ரைன் நெருக்கடியின் உலகளா விய தாக்கம். இலங்கை அதன் ஆரம் பத்தை மட்டுமே இப்போது பார்க்கிறது. – எனக் குறிப்பிட்டார் ரணில்.

---

## தண்ணீர்த் தொட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் தனது பிள்ளையுடன் பூவரசன் குளம், நித்தியநகர் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றிற்கு சென்றுள் ளார். அங்கு சிறுமியை நிறுத்திவிட்டு தாய் கச்சான் அறுவடை செய்து கொண்டிருந்த போது விளையாடிக் கொண்டிருந்த 3 வயதுச் சிறுமி அங் கிருந்த தண்ணீர் தொட்டியில் விழுந்து நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார்.

கச்சான் அறுவடை செய்து கொண் டிருந்த தாயார் சிறுமியைக் காண வில்லை எனத் தேடிய போது சிறுமி தண்ணீர் தொட்டியில் விழுந்திருந் தமை கண்டுபிடிக்கப்பட்டது. சிறுமியை மீட்டு பூவசரன்குளம் வைத்தியசா லைக்கு கொண்டு சென்ற போதும் வைத்தியசாலைக்கு வருவதற்கு முன் னரே சிறுமி மரணமடைந்தது விட்டார் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, சுந்தரபுரம் பகுதியைச் சேர்ந்த கிருசாந்தன் தட்சாயினி என்ற 3 வயது சிறுமியே இவ்வாறு மரணம டைந்தவராவார்.

---

## வடக்கில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்ப டையில் அதிரடிப்படையினர் வீட்டைச் சுற்றிவளைத்தனர்.

இதன்போது 4 மூடைகளில் 141 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது. அதனை உடைமையில் வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள் ளார்.

இதேநேரம் கிளிநொச்சி ஊடாக வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட 180 கிலோ கஞ்சாவை கிளிநொச்சி பொலிஸார் மீட்டுள்ளனர்.

காரில் கஞ்சா கொண்டு செல்லப் படுவதாகக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொண்ட போது இந்த கஞ்சா மீட்கப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது. சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

---

## குஞ்சர்கடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாடு ஒன்று குறுக்காகச் சென்றதா கவும், இதனால் பதற்றமடைந்த மாண வன் மோட்டார் சைக்கிளின் கட்டுப் பாட்டை இழந்த நிலையில் விபத்து ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

உடனடியாகவே காயமடைந்த மாணவர்களை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல் லப்பட்டனர். மருத்துவமனையில் ஒரு மாணவன் மரணமடைந்துள்ளான் எனத் தெரிவிக்கப்பட்டது.

மண்டான் கரணவாய் மேற்கு பகுதி யைச் சேர்ந்த செல்வமோகன் வாணி ஜன் (வயது 17) என்பவரே மரணம டைந்துள்ளார்.

இவர் தற்போது நடைபெற்ற க. பொ.த.சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றியவர் எனவும் தெரியவந்துள்ளது.

விபத்துத் தொடர்பான விசாரணை களை நெல்லியடிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

சடலம் உரிய விசாரணைகளுக்கா கவும், உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வும் பருத்தித்துறை ஆதார வைத்தியசா லையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## கேலிக்கூத்தாகும் அரசமைப்பு

**இலங்கையின் அரசமைப்பும் அதன் திருத்தங்களும் கேலிக் கூத்தாகி வருகின்றமை கண்கூடு.**

**அரசமைப்பு என்பது நாட்டின் பிரதான – அடிப்படை – மீயுயர் – சட்டம். அது சந்தேகத்துக்கு அப்பால், எந்தக் கேள்விப்படுத்தலுக்கோ, மட்டுப்படுத்தலுக்கோ, உட்படுத்தப்படாமல் எந்தக் காலத்திலும் – எப்போதும் – ஒரே மாதிரியாக முழு அளவில் – நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நாட்டில் சட்டத்தின் ஆட்சிக்கான வரையறை எல்லை வரம்பு அதுவாகத்தான் இருக்க வேண்டும்.**

**ஆனால் இந்த வரையறைகள் எல்லாம் இலங்கை அரசமைப்புக்கு இல்லை. அது இரும்புச் சட்டகமாக உறுதியானதாக இல்லாமல், ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்கள் இழுத்த பக்கம் எல்லாம் இழுபடும் இறப்பர் வார் போல போல மாறியிருப்பது இலங்கையின் துரதிர்ஷ்டம்.**

**நாட்டின் அதியுர் சட்டத்தில் இருப்பதை – கறுப்பு, வெள்ளையில் எழுதப்பட்டிருப்பதை – நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று நாட்டுத் தலைவர்கள் பகிரங்கமாகக் கூறுவதை 'தேசாபிமானம்' என்று போற்றும் கீழ்தரமான அரசியல் நிலைமை உலக நாடுகளில் இலங்கையில் மட்டும்தான் உள்ளது.**

**அரசமைப்பையும், இலங்கையின் சட்டங்களையும் போற்றிப் பாதுகாப்போம் என்று தமது சத்தியப்பிரமாண நிகழ்விலே உறுதியுரை அளித்து, பிரதிக்ஞை செய்து, பதவியேற்ற ஜனாதிபதியிலிருந்து, பிரதமர் தொடங்கி, அமைச்சர்கள் வரை அந்த அரசமைப்புச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தவே மாட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்து செயற்படும் போது, அவர்களை நாட்டின் 'பூமிபுத்திரர்கள்' என்று போற்றும் அரசியல் மாண்பு(?) இலங்கைத் தீவில் மட்டும் தான் உள்ளது. உலகின் பிற இடங்களில் எல்லாம் அந்தந்த நாடுகளின் அரசமைப்புகளுக்கு எதிரான செயற்பாடு தேசத்துரோகமாக அல்லது தேச விரோதமாகத்தான் கணிக்கப்படும். இங்குதான் அது தேசாபிமானமாகப் போற்றப்படுகின்றது.**

**அதற்கு விசேட காரணம் உண்டு.**

**நாட்டின் அரசமைப்பை விடவும் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்க – மேலாண்மை – பண்பியல்பு மிக உயர்ந்தது என்ற இனவாதச் சிந்தனையில் பெரும்பான்மையினத்தவர்கள் ஊறியிருக்கின்றமைதான் இதற்குக் காரணம்.**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்ததாக சட்ட ரீதியாக அறிவிக்கப்பட்டு சுமார் 34 ஆண்டுகள் கடந்து விட்டன.**

**ஆனால் அதில் குறிப்பிட்டபடி – சட்டமாக்கப்பட்டபடி – மாகாணங்களுக்க காணி அதிகாரங்களோ, பொலிஸ் அதிகாரங்களோ இன்னும் பகிரப்படவேயில்லை. அப்படிப் பகிர்வது தேசத்துரோகம் என்ற மாதிரி – அரசமைப்பில் இருப்பதை நடைமுறைப்படுத்துவது தேச விரோதம் என்ற கணக்கில் – பௌத்த, சிங்கள தேசமும் அதன் ஆட்சிப் பீடங்களும் எண்ணி, வெளிப்படுத்திச் செயற்படுகின்றன.**

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்த சமயம் கொண்டு வரப்பட்ட 19ஆவது திருத்தத்தின் கீழ் சில விசேட உரிமைகள் அவரது ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியாக இருப்பவருக்கு மட்டும் விசேடமானவை என்ற பெயரில் வழங்கப்பட்டன.**

**இப்போது 21ஆவது திருத்ததத்தை ஒட்டியும் சில விசேட உரிமைகள், வரப்பிரசாதங்களை இப்போதைய ஜனாதிபதிக்கு மட்டும் என்ற ஒழுங்குடன் வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஒவ்வொரு ஜனாதிபதிக்கும் என்று அரசமைப்பையே மாற்றும் கேலிக் கூத்து இது. இத்தகைய அரசியல் தலைவர்களின் கைகளில் நாடு சிக்கியிருப்பதுதான் பெரும் அவலமாகும்.**

# கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம மீதான தாக்குதல் திட்டமிட்ட ஒரு செயல்!

## இளம் ஊடகவியலாளர் சங்கம் தெரிவிப்பு

கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம அமைதிப் போராட்டங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிட்ட செயல் என்றும் இதற்கு பொலிஸும் அரசாங்கமும் ஆதரவளித்தன என்றும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நேற்று தெரிவித்துள்ளது.

காலிமுகத்திடல் அமைதிப் போராட்டம் மீதான தாக்குதல் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் முறைப்பாடு செய்த இளம் ஊடகவியலாளர் சங்கத்துக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சட்டத்தரணி நுவான் போபகே மற்றும் சட்டத்தரணி டி.எம்.திஸாநாயக்க ஆகியோருடன் சங்கத்தின் உறுப்பினர்களான தரிந்து ஜயவர்தன, ஷாலிகா விமலசேன, எம்.எப்.எம். பசீர் ஆகியோர் நேற்று ஆணைக்குழுவில் முன்னிலையாகினர்.

இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் சார்பில் முதலில் சாட்சியமளித்த தரிந்து ஜயவர்தன, அரசாங்கம் வேண்டுமென்றே பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை நசுக்க முயற்சிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, போராட்டங்களை நேரடியாக ஒளிபரப்பிய தொலைக்காட்சிகள் தொடர்பாக விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலி முகத்திடலில் தாக்குதல் நடத்தும் திட்டம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முன்னர் தொழிற்சங்கம் அறிவித்திருந்ததாகவும் அடக்குமுறைச் சம்பவங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளைப் பொலிஸார் விசாரணை செய்யவில்லை எனவும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பவத்தின் போது மேல்மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனின் மேற்பார்வையில் கலவரம் அடக்கப்பட்டது. போராட்டத்தின் மீதான தாக்குதலை நிறுத்தும் பொறுப்பும் திறமையும் தேசபந்து தென்னகோனுக்கு இருந்ததாக சங்கம் சாட்சியமளித்துள்ளது.

தாக்குதல் நடத்தப்படுவதற்கு முன்னர் இவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டமை பொலிஸாருக்குத் தெரியும் எனவும் அது தொடர்பாக தமது சங்கம் உரிய நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாகவும் இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்துக்கு ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், பிரதமர், அமைச்சர்கள், பொலிஸ்மா அதிபர், தேசபந்து தென்னகோன் மற்றும் பலர் நேரடியாகப் பொறுப்புக் கூற வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் தாக்குதல் தொடர்பாகவும் பொலிஸாரைத் தாக்க அனுமதித்தமை தொடர்பிலான காணொலி ஆதாரங்களையும் சங்கம் சமர்ப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# உணவுப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவும்!



ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, ஜூன் 04

அத்தியாவசிய உணவுப் பொருள்களையும் போதுமான அளவு கையிருப்பில் வைத்திருக்குமாறும் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுமாறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் மூலம் சில வர்த்தகர்கள் பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருப்பதாகக் காட்டி விலையை அதிகரிக்க மேற்கொள்ளும் திட்டமிட்ட முயற்சிகளைத் தடுக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு ஆகிய துறைகள் எதிர்நோக்கும் சவால்களுக்கு விரைவான தீர்வு காண்பது தொடர்பாக கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

மொத்த சந்தைக்கு விநியோகிக்கப்படும் விவசாய விளைபொருள்களில் ஒரு பகுதியை நேரடியாக கிராம சந்தைக்கு வழங்க வேண்டும் என்றும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

இதன் மூலம் போக்குவரத்துச் செலவு குறைவதோடு, கிராமப்புற நுகர்வோர் குறைந்த விலையில் பொருள்களைப் பெற்றுக்கொள்வதோடு, விவசாயிகள் அதிக விலைக்கு கொள்வனவு செய்வதற்கும் இயலும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நியாயமற்ற விலையில் வர்த்தகம் செய்வோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் சதொச மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களை செயற்படுத்துவதுடன் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளை வர்த்தகர்களின் விருப்பத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்ய இடமளிக்காமல் கட்டுப்படுத்துவது தொடர்பாக நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

# பாதுகாப்புக் கொள்கை நாட்டுக்கு மிக அவசியம்!

## கமல் குணரத்ன வலியுறுத்து



நாட்டின் தேசிய பாதுகாப்பு இலக்குகளை அடைவதற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறையுடன் கூடிய பாதுகாப்பு கொள்கை அவசியமானது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பல்வேறு வழிகளில் சாத்தியமான அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்கு நாட்டின் முக்கிய பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக வழக்கமான பகுப்பாய்வுகளை மேற்கொள்வது பொருத்தமானது என்றும் அவர் கூறியுள்ளார்.

# முழு நேர அரசியலில் ஈடுபடுமாறு ஐ.தே.கவினருக்கு ரணில் பணிப்பு!



முழு நேர அரசியலில் ஈடுபடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டாரவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அத்தோடு, ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுமாறு கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தனவிற்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான நெருக்கடியைப் போக்குவதற்கு தனது முழு நேரத்தையும் அர்ப்பணித்துள்ளநிலையில், கட்சியின் அரசியல் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய பிரதமர் ரணில், இந்தப் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

பிரதமரின் பணிப்புரைக்கு அமைய ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார எதிர்காலத்தில் கட்சியின் அனைத்து அரசியல் நடவடிக்கைகளையும் ஆரம்பிக்கவுள்ளார்.

# சிறுநீரக மோசடிகள் தொடர்பில் இரு வைத்தியர்கள் மீது விசாரணை!

சிறுநீரக மோசடி தொடர்பில் இரண்டு வைத்தியர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மருத்துவ சபையின் செயலாளர் மருத்துவர் ஆனந்த ஹபுகொட இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மருத்துவ சபையின் ஒழுக்காற்று விதிமுறைகளுக்கு அமைவாக குறித்த இரு வைத்தியர்கள் தொடர்பில் ஒழுக்காற்று விசாரணைகளை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள இரண்டு வைத்தியர்கள் சிறுநீரக மோசடியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் கண் வைத்தியசாலையில் இந்த வைத்தியர்கள் பணியாற்றி வருகின்றமையும் தெரியவந்துள்ளது.

சிறுநீரக மோசடி தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு சிறுநீரக மோசடி தொடர்பாக இந்தியப் பிரஜை ஒருவர் சி.ஐ.டியால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் இரண்டு வைத்தியர்கள் தொடர்பிலும் தெரிவித்துள்ளார் என இலங்கை மருத்துவ சபையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு!

இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் அநுராதபுரத்தில் 13 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம் பாலின சுகாதார சேவைகள் நிலையத்தின் வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கஹடகஸ்திகிலிய, தம்புத்தேகம, ஹொரவப்பொத்தானை, மத்திய நுவரகம் மற்றும் மதவாச்சி உள்ளிட்ட பகுதிகளிலேயே இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பற்ற பாலுறவு காரணமாகவே எச்.ஐ.வி. தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அநுராதபுரத்தில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான முதலாவது நபர் பதிவாகியிருந்தார்.

அதன் பின்னர் குறித்த மாவட்டத்தில் மொத்தமாக எச்.ஐ.வி. 15 நோயாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது அதிகூடிய நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என வைத்திய அதிகாரி ஹேமா வீரகோன் தெரிவித்துள்ளார்.

# ஆயிஷா கொலை வழக்கின் பிரதான சந்தேகநபர் முன்னரும் பெண் ஒருவரை துஷ்பிரயோக செய்ய முயற்சி!

## வெளிவந்த அதிர்ச்சித் தகவல்

அட்டலுகம பிரதேசத்தைச் சேர்ந்த பாத்திமா ஆயிஷா என்ற சிறுமியை கொலை செய்தேன் என வாக்குமூலம் அளித்த சந்தேகநபர், இதற்கு முன்னரும் அப்பகுதியில் பெண் ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றுள்ளதாகவும் சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண் பொலிஸில் முறைப்பாடளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண் தங்கியிருந்த வீட்டுக்குள் இரகசியமாக பிரவேசித்த சந்தேக நபர், அவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாகத் தெரிவித்துள்ள பாதிக்கப்பட்ட பெண் 'நான் முன்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தேன். சம்பவ தினத்தன்று நான் எனது இரண்டு குழந்தைகளுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன்.

இரகசியமாக பிரவேசித்த குறித்த சந்தேக நபர் என் வாயை இறுக்கமாக மூடி, என்னை கயிற்றால் கட்ட முற்பட்டபோது, நான் கண் விழித்து, கூச்சலிடத் தொடங்கினேன். பின்னர் அவர் அங்கிருந்து சென்றுவிட்டார்.

இது தொடர்பாக நான் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தும் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

அந்த சந்தர்ப்பத்தில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் ஆயிஷாவுக்கு இப்படியான ஒரு நிலைமை நேர்ந்திருக்காது. - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# செவ்வாய்க்கிழமை வரையும் எரிவாயு விநியோகம் இல்லை

## லிற்றோ நிறுவனம் அறிவிப்பு

நாட்டில் நேற்று (வெள்ளிக்கிழமை) முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை எரிவாயு விநியோகிக்கப்படாதென லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அண்மையில் நாட்டை வந்தடைந்த கப்பலில் கொண்டுவரப்பட்ட எரிவாயு கொள்கலன் விநியோகம் நேற்றுடன் முடிவடைந்ததாக அந்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் 2 ஆயிரத்து 500 தொன் எரிவாயு மெற்றிக் கொள்கலன் கொண்ட கப்பல் நாளை மறுதினம் நாட்டை வந்தடையவுள்ள நிலையில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் எரிவாயு விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எனவே பொதுமக்கள் வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிற்றோ நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேலும் லாப்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான எரிவாயு கையிருப்புடன் கூடிய கப்பல் ஒன்று இன்று இலங்கைக்கு வரவுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

# நாளுக்கு நாள் சடுதியாக அதிகரிக்கும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை!



இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 24 ஆயிரத்து 523 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 6 ஆயிரத்து 483 பேர் கடந்த மே மாதத்தில் மாத்திரம் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர குறிப்பிட்டுள்ளார். அத்துடன், வியாழக்கிழமை மாத்திரம் 313 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் என அவர் தெரிவித்தார்.

மேல் மாகாணத்தின் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களிலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், கண்டி, காலி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# பணச்சடங்கு சிறுகதை அறிமுகம்

பணச்சடங்கு சிறுகதைத் தொகுப்பு அறிமுகமும் எழுத்தாளர் ஆசி. கந்தராஜாவுடனான கலந்துரையாடலும் நிகழ்வு நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 - 12 மணிவரை யாழ். பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன், எழுத்தாளர் ஆசி.கந்தராஜா ஆகியோரின் உரைகளும் இடம்பெறவுள்ளன. சற்குணம் சத்திதேவன் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவார்.

# நீர்த்தாங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசல் அக்கரைப்பற்றில் மீட்பு!



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பட்டியடிப்பிட்டி பிரதேசத்தில் தேவைக்கு அதிகமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசல் வியாழக்கிழமை அக்கரைப்பற்று பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமாகக் கைப்பற்றப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சூட்சுமமான முறையில் மூன்று நீர்த்தாங்கிகளில் சேகரிப்பட்டு வைத்திருந்த 3 ஆயிரம் லீற்றர் டீசலே இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவின் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவினர் பொலிஸ் புலனாய்வு பிரிவினரின் தகவலுக்கு அமைய இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக இந்த டீசல் நிரப்பப்பட்ட நீர்த்தாங்கிகள் கைப்பற்றப்பட்டன.

அக்கரைப்பற்று திருக்கோவில் பிரிவிற்கு பொறுப்பாக உள்ள உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.எச்.செனவிரத்தினவின் மேற்பார்வையின் கீழ் அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.சதாத்தின் பணிப்புரைக்கமைவாக பொலிஸ் நிலையத்தின் ஊழல் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி உபபொலிஸ் பரிசோதகர் நூர்தீனின் தலைமையிலான பொலிஸ் குழுவினர் இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த டீசலை கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட டீசல் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர் நேற்று நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார் என அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சுப்பதவி பெறுவதற்காக பிரதமரிடம் மண்டியிட்டனர்!

## சாணக்கியன் எம்.பி. சாட்டை



(க.கிருபாகரன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்குத் தீர்வை வழங்காமல் இராஜாங்க அமைச்சு பதவியை தங்களுக்கு வழங்கக் கூறி மட்டக்களப்பு மாவட்டத்தின் இரண்டு அரச ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாசஸ்தலம் முன்பாக பாய் போட்டு படுத்துகிடக்கின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரில் எரிவாயு விநியோகம் செய்யப்படாத காரணத்தால் கடந்த புதன்கிழமை மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தமையுடன் பதற்ற நிலைமையும் ஏற்பட்டது.

மட்டக்களப்பு நகரில் கடந்த ஏழு தினங்களுக்கு மேலாக எரிவாயுவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்கள் இரவு பகலாக வீதியில் உறங்கும் நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு பயனியர் வீதியில் எரிவாயுக்காக காத்திருக்கும் மக்கள் எதிர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிவாயு விநியோகம்செய்யும் இரண்டுமுகவர்கள் பக்கச்சார்பாக செயற்படுகின்றனர் எனவும் இது தொடர்பில் அரசியல்வாதிகளோ, அதிகாரிகளோ பாராமுகமாக இருக்கின்றனர் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தினக்கூலிக்கு சென்று அன்றாடம் தமது குடும்பங்களை நடத்துபவர்கள் நான்கு நாள்களுக்கும் மேலாக எரிவாயுவினை பெற்றுக்கொள்வதற்காக இரவுபகலாகநிற்கும்நிலையேற்பட்டுள்ளதாகவும் இதனால் குடும்பங்கள் பாரிய கஷ்டங்களை எதிர்கொள்கின்றன எனவும் தாகவும் தெரிவித்தனர்.

இதன்போது அங்கு சென்ற மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், கோவிந்தன் கருணாகரம் ஆகியோர் மக்களுடன் நிலைமைகளைக் கேட்டறிந்து கொண்டமையுடன் குறித்த பகுதியிலிருந்து மாவட்ட அரசாங்க அதிபரையும் தொடர்பு கொண்டு மக்களின் நிலைமைகள் தொடர்பாக நடவடிக்கையெடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

எனினும் தமது நிலைமைகள் தொடர்பாக அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் பொறுப்பற்ற வகையிலேயே செயற்படுகின்றனர் எனவும் மக்களின் தேவையறிந்து செயற்படவில்லையெனவும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்–

'தற்போதைக்கு எந்தவிதமான எரிவாயு இறக்குமதியும் இல்லை' எதிர்வரும் நான்காம் திகதிக்கு பின்னர் தான் இலங்கைக்கு எரிவாயு கப்பல் வரக்கூடியதாக இருப்பதாக அறிய முடிகின்றது.

இரண்டு மாதங்களுக்கு ஒரு லட்சம் எரிவாயுக்கள் மாவட்டத்துக்கு தேவைப்படுகின்ற போதும் வெறுமனே 15 ஆயிரம் எரிவாயுகளை கொண்டுவந்து என்ன செய்ய முடியும் என கேள்வி எழுப்பினார்.

குறிப்பாக மேல் மாகாணத்தில் அதிகளவான எரிவாயுக்கள் வழங்கி வைக்கப்படுகின்றன எனவும் அங்குள்ள அரசியல்வாதிகள் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைக்குறைப்பதற்காகப் பிரதமருடன் நேரடியாகக் கலந்துரையாடி இதற்கான தீர்வுகளை பெற்றுக் கொள்கின்றார்கள்.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அது முற்றிலும் வித்தியாசமான முறையில் காணப்படுவதாகக் குறிப்பிட்டார்.

ஆகவே இந்த வீதியில் எரிவாயு வுக்காக காத்திருப்பவர்கள் வீதிகளை மறித்து போராட்டம் நடத்துவதன் மூலம் பாதிக்கப்படப் போவது மாவட்டத்தை சேர்ந்த எமது மக்களே. எனவே நிலைமையை கருத்தில் கொண்டு செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

குறிப்பாக மட்டக்களப்பில் உள்ள இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் இது தொடர்பாக எங்கேயாவது கதைப்பதைக் காணவும் இல்லை. ஆனால் இன்று மக்கள் எரிவாயுவுக்காக வீதிகளில் பாய் போட்டு படுத்து உறங்கும் நிலையில் இந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாச லுக்கு முன்பாக தங்களுக்குஅமைச்சுப் பதவி வழங்கக் கோரி பாய் போட்டு படுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். மக்கள் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

# 65 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணம் இறக்குமதி செய்த ஓர் ஆண், இரு பெண் கைது

சுமார் 65 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணத்தை இறக்குமதி செய்த கும்பலொன்றை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஓர் ஆண் மற்றும் இரண்டு பெண்கள் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

241கிராம் மற்றும் 480 மில்லி கிராம் எடையுடைய தங்க ஆபரணம் ஒன்றையும், மூன்று தொலைபேசிகளையும் சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றினோம் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நிதிச் சலவை மற்றும் சுங்கத்தீர்வை செலுத்தாது பொருள் இறக்குமதி செய்தல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தெஹிவளை மற்றும் கொழும்பு – 12 பிரதேசங்களைச் சேர்ந்த 20, 35 மற்றும் 42 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

# கோமரன்கடவெல, குச்சவெளி, மொறவெவவில் 546 வறிய குடும்பங்களுக்கு நிவாரணப் பொதி






திருகோணமலை மாவட்டத்தில் வருமானம் குறைந்த 546 வறிய குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் ஆரம்பக்கட்ட நிகழ்வு நேற்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டத்தின் கோமரன்கடவெல, மொறவெவ மற்றும் குச்சவெளி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள பொருளாதார ரீதியாக நலிவுற்ற – நாள் கூலி வேலையை மேற்கொள்ளும் – குடும்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இப்பொதிகள் வழங்கி வைக்கப்படன.

இதனடிப்படையில் குச்சவெளிப் பிரதேச சபையைச் சார்ந்த இரு பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகளை மாவட்ட அரசாங்க அதிபர் நேற்று அடையாளமாக வழங்கி வைத்தார்.

இவ் உலர் உணவுப் பொதி ஒன்றின் பெறுமதி 6 ஆயிரத்து 190 ரூபா ஆகும்.

மேலும் குறித்த பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள போஷாக்குக் குறைவான 80 சிறுவர்களுக்கும், 89 கர்ப்பிணித் தாய்மாருக்கும் தலா 7 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மூலமாகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் மின்சார நெருக்கடி காரணமாக சிறுவர்களது கல்விச் செயற்பாட்டை தடங்களின்றி மேற்கொள்ள 740 மின்னேற்றும் மின்விளக்கு (charger light) வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனமான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அர்.அரியரட்ணம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடைய ஒருங்கிணைப்பு அதிகாரி ஏ.எம்.எஸ்.பி.அத்தநாயக்க உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir



**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!






**1. கேள்வி:-** டான் ரி.வி. 'ஸ்பொட் லைற்' ரசிகப் பெருமகனாரே! இம்முறை வெளிவந்த சுமந்திரனின் புதிய பேட்டி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** எத்தனை தரம் தான் ஒரு மனிதரைப் புகழ்ந்துரைப்பது? ஆனாலும், நிதானம், தெளிவு, அரசியல் அறிவு, தீர்க்கதரிசனம் என்பவற்றோடு பேசும் அவரை மீண்டும், மீண்டும் பாராட்ட வேண்டித்தான் இருக்கிறது. கட்சி அரசியல், உள்நாட்டு அரசியல், வெளிநாட்டு அரசியல் என அனைத்திலும் ஆழங்கால்பட்ட அறிவோடு பேசுகிறார். பல காரணங்கள் சொல்லிச் சுமந்திரனைத் திட்டிக் கொண்டிருப்பவர்கள் 'இவருக்குப் பதிலாய் இவர்' என வேறொருவரை விரல் நீட்டிக்காட்ட முடியுமா என்பது ஐயத்திற்குரிய ஒன்றாகவே இருக்கிறது. இச்செய்தியால் நான் மகிழ்ச்சி அடையவில்லை. தமிழ் இனத்திற்கு இப்படி ஒரு தலைமை வறுமையா எனக் கவலைப்படவே செய்கிறேன்.

கூட்டமைப்பினரின் ஒற்றுமை பற்றிய கடைசிக் கேள்விக்கு மட்டும் நேர்படப் பதில் சொல்ல முடியாமல், சுற்றி வளைத்துச் சமாளித்து அவர் பதில் உரைத்தது, கொஞ்சம் சலிப்பைத் தந்தது. தம் கட்சி சரிவர முடிவுகளை எடுக்காவிட்டால் இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் மக்கள் போராட்டம் போல, தமது கட்சிக்கு எதிராகவும் மக்கள் போராட்டம் வெடிக்கலாம் எனச் சொல்லும் 'கெத்து' சுமந்திரனுக்கு மட்டுமே இருக்கக்கூடியது.

பேட்டியாளர்களில் பழைய முகம் மீண்டும் தோன்றியதில் ஆறுதல் அடைந்தேன். இளைஞர்கள் கவனிக்க வைக்கிறார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார், சுமந்திரனைத் தமிழினத் தலைவராய் ஆக்காமல் விடமாட்டார் போல.**

**2. கேள்வி:-** இணையவெளிகளில் சைவசித்தாந்தம்தான் உயர்ந்தது, ஸ்மார்த்தம் தாழ்ந்தது என்றெல்லாம் சிலர் நேரம் மினக்கட்டு நிறைய எழுதுகிறார்கள். நம் சமயத்தை நோக்கிப் புறப்பகைகள் பல வந்துகொண்டிருக்கும் போது இந்த அகப்பகை தேவைதானா? இது பற்றி நீங்கள் ஒன்றும் வாய்திறப்பதில்லையே. ஏன்?

**பதில்:-** சிலர் இறைவனை, தத்துவக் கூண்டுக்குள் அடைத்துவிடலாம் என நினைக்கிறார்கள். உலகைக் காக்கும் சிவனுடைய 'பொடிகாட்ஸாய்' தம்மை நினைத்துக் கொண்டு இவர்கள் படும்பாட்டை என்னவென்று சொல்வது? உயர்ந்ததும், தாழ்ந்ததும் இறைவனது அங்கீகரிப்பில்தான் முடிவாக்கப்படுகிறது என்பது என் கருத்து. எல்லா மதங்களிலும் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு. அதுபோல எல்லா மதங்களிலும் ஞானியர்களும் உள்ளனர். அஞ்ஞானியர்களும் உள்ளனர். நீங்கள் சொல்லும் இஞ்ஞானிகள், எஞ்ஞானிகள் என இறைவனே முடிவு செய்யட்டும். எனக்கு, கடவுளைக் கும்பிடக் கிடைக்கும் நேரமே போதாமல் இருக்கிறது. அப்படியிருக்க, இந்தத் தேவையில்லாத கயிறிழுப்புகளில் கலந்து, சொற்பமாய்க் கிடைக்கும் காலத்தையும் வீணாக்க நான் விரும்பவில்லை. விடுங்கள்! நாம் நம் 'சோலியைப்' பார்ப்போம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இதுவும் 'திருவருட் சம்மதம்' தானோ?**

**3. கேள்வி:-** காலிமுகத்திடலின் 'கோட்டா கோ கம' ஆர்ப்பாட்டம் மெல்ல மெல்லத் தேய்ந்து வருகிறதா?

**பதில்:-** அப்படி ஒரு தோற்றம் உண்டாவது உண்மைதான். ஆனால் இடையிடையே பல்கலைக்கழக மாணவர்களால் ஏற்படும் கொந்தளிப்பின் வேகத்தைக் காண, நெருப்பு அணையவில்லை அது சாம்பல் பூத்துக் கிடப்பதாய்த்தான் நினைக்கத் தோன்றுகிறது. அந்த நெருப்பு அணையாமல் இருப்பதுதான் இந்த நாட்டிற்கும் நல்லதென்று கருதுகிறேன். ஒருதரம் அந்த நெருப்பைச் சாதாரணமாய் நினைந்து அதனை வலிந்து அணைக்க முற்பட்டால், அது நாடு முழுவதும் பரவியதை ஆட்சியாளர்கள் மறக்கக்கூடாது. இன்றைக்கு இருக்கும் நிலைமையில் அந்தப் புரட்சியாளர்களின் வேகம்தான், அறம் பிழைத்த அரசியலுக்குத் தடைபோடக் கிடைத்திருக்கும் ஒரே 'சறுக்குக்கட்டை.' அதுவும் கைதவறிப் போனால் நாடு பேராபத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதே நேரத்தில் வேறொன்றையும் இங்கு சொல்ல வேண்டியிருக்கிறது. மக்கள் ஈர்ப்பிற்காக இந்தப் போராட்டக் குழுக்கள் வேறு வேறு கருத்துக்களையும் அந்த அரங்கில் முன்வைக்கத் தொடங்கியிருக்கின்றன. அது, எடுத்துக் கொண்ட போராட்டத்தின் வீரியத்தைக் குறைத்துவிடும் என நினைக்கிறேன். நோக்கங்களின் அளவு விரிய விரிய அவற்றை அடையும் முயற்சியின் கூர்மை குன்றிவிடும் என்பதை அவ் இளைஞர்கள் உணர்வது நல்லது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'வெற்றி மீது வெற்றி வந்து எம்மைச் சேரும்**
**அதை வாங்கித்தந்த பெருமையெல்லாம் இவர்களைச் சேரும்' ஹி..ஹி..**

**4. கேள்வி:-** சிவனை வழிபடுவோர், நவக்கிரகங்களை வழிபடத் தேவையில்லை என்று சிலர் சொல்கிறார்களே. அது உண்மையா?

**பதில்:-** அந்தக் கூற்றில் உண்மையும் இருக்கிறது. பொய்யும் இருக்கிறது. எப்படி என்கிறீர்களா?

நமது சைவசமயத்தில் சிவன்தான் முழுமுதற் கடவுள். சிவனுக்குக் கீழ்ப்பட்ட பல சிறு தெய்வங்களும் இருப்பதாய் நம் சைவசமயம் சொல்கிறது. நவக்கிரகங்களையும் அத்தகைய சிறுதெய்வ நிலையாகவே நம்மவர்கள் கொள்கின்றனர். முழுமுதற் கடவுளான சிவனை வழிபடுவோர் சிறுதெய்வங்களான நவக்கிரகங்களை வழிபடத் தேவையில்லை என்பதே சிலரின் கருத்தாக இருக்கிறது.

அவர்கள் ஞானசம்பந்தருடைய 'வேயுறு தோளி பங்கன்' எனும் தேவாரத்தில் வரும் 'ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பு இரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகரே' எனும் தேவார அடிகளைத் தமது கருத்துக்கு மேற்கோளாய் எடுத்துக் காட்டுகின்றனர். அந்த அளவில் அவர்கள் சொல்வதில் உண்மையும் இருக்கத்தான் செய்கிறது.

ஆனால் அப்பாடலில் நுட்பமாய் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டியும் இருக்கிறது. அப்பாடலில் வரும் 'அடியார்' என்ற வார்த்தை, உலகப் பற்றில்லாமல், ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றாய்க் கருதி, 'கூடும் அன்பினால் கும்பிடும்' உண்மை அடியார்களைக் குறிப்பதாகவே பெரியோர்கள் சொல்கிறார்கள். ஞானசம்பந்தரும் அத்தகைய ஒருவரேயாம். அந்த மெய்யடியார்களின் நிலையை அடைய, ஆத்ம பக்குவத்தில் நாமெல்லாம் இன்னும் எத்தனையோ படிகளைக் கடக்க வேண்டியிருக்கிறது. எனவே அவர்கள் நிலைகருதி சொல்லப்பட்ட கருத்தை நமக்காக்கிக் கொண்டு இயங்க நினைப்பதென்பது, 'புலியைப் பார்த்துப் பூனை குறி சுட்டுக் கொண்ட கதையாகத்தான் முடியும்.

விளக்கத்திற்காக நிதர்சனமான ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். நம் நாட்டின் நிர்வாக அமைப்பு, இந்நாட்டின் தலைவரான ஜனாதிபதியில் தொடங்கி ஊரில் உள்ள விதானையார் வரையும் விரிகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். ஜனாதிபதியின் நேரடித் தொடர்பால் செல்வாக்குப் பெற்ற ஒருவர் (நான் ரணிலைச் சொல்லவில்லை) ஊரிலுள்ள விதானைக்கு மதிப்பளிக்கவோ, பயப்பிடவோ தேவையில்லை. அத்தகைய ஒருவரின் செயலைப் பார்த்துவிட்டு, ஜனாதிபதியுடன் எந்தத் தொடர்புமில்லாத ஒரு நபரும், நானும் விதானைக்கு மதிப்பளிக்கவோ, பயப்படவோ மாட்டேன் என்றால், அவர் கதி என்னாகும்? என்று நினைத்துப் பாருங்கள். அவர் நிவாரணச் சாமான்களையும் இழக்கவேண்டித் தான் வரும்.

அதுபோலத்தான் சிவனோடு நேரடித் தொடர்பில் இருந்த அடியார்களைப் பார்த்து, நாமும் சிறு தெய்வங்களான நவக்கிரகங்களைத் தொழாமல் விடுவோமானால் நம் தகுதிக்கேற்ப, கிடைக்கக்கூடிய பலன்களையும் வீணாக இழந்து போவோம். நமது ஆலயங்களில் சிறு தெய்வங்களான நவக்கிரகங்களை வைக்கும் முறைமையை, நூல்களும், பெரியவர்களும் தெரியாமல் செய்யவில்லையாக்கும்!

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியார் தானும் ஒரு 'வாரியார்' ஆகப் பார்க்கிறார் போல.**

**5. கேள்வி:-** துமிந்த சில்வா வழக்கில் ஜனாதிபதியின் அதிகாரத்தைச் சட்டத்தின் மூலம் சுமந்திரன் முறியடித்திருக்கும் சாதனை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** பெருமைப்படுகிறேன்! கவலைப்படுகிறேன்! வருத்தப்படுகிறேன்!

பெருமைப்படுவது - நம் தமிழ்த்தலைவர் ஒருவரின் ஆற்றல் நினைந்து.

கவலைப்படுவது - அத்தலைவரின் பாதுகாப்பை நினைந்து.

வருத்தப்படுவது - அவர் தகுதி அறிந்து கட்சிக்குள் இன்னும் தக்க இடங்கொடுக்காத கூட்டமைப்பினரின் செயலை நினைந்து.

**உலகநாதரின் ஒப்பீனியன் * உலகநாதரும் பெருமை கொள்கிறார்.**

**6. கேள்வி:-** இறை வழிபாட்டில் கிரியைகள் அவசியமற்றவை என்று சிலபேர் சொல்கிறார்களே?

**பதில்:-** முன்பொருமுறை இந்தியாவின் 'ஆர்.எஸ்.எஸ்.' அமைப்பைச் சேர்ந்த ஓர் பெரியவரைச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர் ஓர் பெரிய உண்மையை எனக்கு எடுத்துச் சொன்னார். மாற்றுச் சமயத்தவர்கள் மதமாற்றத்திற்கான முயற்சிகளை எவ்வளவோ செய்தும், இந்தியாவில் மிகச் சொற்பமான மக்களைத்தான் அவர்களால் இன்றுவரை மதம் மாற்ற முடிந்திருக்கிறது. அது உங்களுக்குத் தெரியுமா? என்றார். தான் சார்ந்த 'ஆர்.எஸ்.எஸ்.' அமைப்பின் செயற்பாட்டின் பெருமையைச் சொல்லத்தான் அவர் அந்தச் செய்தியைச் சொன்னதாய் நினைந்த நான், அதற்கு நீங்கள் சார்ந்திருக்கும் இயக்கம் போன்றவற்றின் செயற்பாடுகள் தான் காரணமா? என்று கேட்டேன். தன் அமைப்பைப் பெருமைப்படுத்தப் பொய்மையாய் அவர் 'ஆம்' என்று பதிலுரைத்திருக்கலாம். ஆனால் அவர் எனது அக் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல், 'அப்படியில்லை. உண்மையில் மாற்று மதங்கள் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் மதமாற்றங்கள் நிகழாமல் இருந்ததற்கு பாமர மக்கள் கிரியைகளின் மேல் காலாகாலமாக வைத்திருந்த நம்பிக்கைதான் முக்கிய காரணம் என்றதோடு, கிரியைகளில் ஊறியவர்களால் அதைவிட்டுப் பிறமதங்களுக்குச் செல்லமுடியவில்லை' என்றும் உரைத்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரச நிறுவனங்களில் ஜனாதிபதியின் படத்துக்கு பதிலாக நரேந்திர மோடியின் படத்தை மாட்டுங்கள்!

## ரோஹன பண்டார எம்.பி. சாட்டை



இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அவசியமான உரத்தை வழங்குவதற்கு உடன்பட்டிருக்கின்றார் எனவும், அது நாட்டை வந்தடைந்தவுடன் 20 நாள்களுக்குள் அதனை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தயாராக இருக்கின்றேன் எனவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அமைச்சுக்கள் உள்ளடங்கலாக அனைத்துஅரசஸ்தாபனங்களிலும்மாட்டப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் படத்தை அகற்றிவிட்டு, அதற்குப்பதிலாக இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் படத்தை மாட்டுமாறு யோசனை முன்வைக்கின்றேன்.

ஏனெனில் இப்போது இந்தியாவிடம் தஞ்சமடைவதைத்தவிர வேறெந்த வழிகளும் இல்லாதுபோயுள்ளன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன பண்டார சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு –

இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு அவசியமான உரத்தை வழங்குவதற்கு உடன்பட்டிருக்கிறார் எனவும், அது நாட்டை வந்தடைந்தவுடன் 20 நாள்களுக்குள் அதனை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இந்நிலையில் இந்தியாவால் வழங்கப்படும் பொருள்களைப் பகிர்ந்தளிப்பதற்கான அரசாங்கமா தற்போது இருக்கின்றது என்ற கேள்வி எம்மத்தியில் எழுந்துள்ளது.

அதுமாத்திரமன்றி அடுத்த போகத்திலிருந்து அரிசி இறக்குமதியைப் படிப்படியாகக் குறைக்கப்போகிறேன் எனவும், அதன்மூலம் எஞ்சுகின்ற பணத்தை விவசாயிகளுக்கு நிவாரணமாக வழங்கப்போகிறேன் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறுகின்றார். ஆனால் இறக்குமதியை நிறுத்திய பின்னர் உள்நாட்டு விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்கு அவசியமான உரத்தை எங்கிருந்து பெறமுடியும்? நாட்டில் டொலருக்கானநெருக்கடிநிலவுகின்றதற்போதையசூழ்நிலையில், அரசாங்கம் உரத்தை இறக்குமதி செய்யுமாறு தனியார் துறையினரிடம் கூறுகின்றது. அவ்வாறெனில் தனியார் துறையினர் அதற்குத் தேவையான டொலரை எவ்வாறு பெற்றுக்கொள்வர்?

எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் நிலத்தில் விழும் ஒருதுளி மழைநீரையும் விரயமாக்கக்கூடாது எனக்கருதி அதனைச் சேமிக்கக்கூடியவாறு வாவி, குளங்கள் போன்றவற்றை நிர்மாணித்திருக்கின்றார்கள். ஆனால் நாட்டின் நிர்வாகத்தில் மாற்றத்தைக் கொண்டுவருவதாகக்கூறி ஆட்சிப்பீடமேறியவர்கள் நவீனமுறைகளை மாத்திரமன்றி பழைமையான முறைகளையும் இல்லாமல் செய்திருக்கின்றார்கள்.

இவ்வாறானதொரு பின்னணியில் அமைச்சுக்கள் உள்ளடங்கலாக அனைத்து அரச ஸ்தாபனங்களிலும் மாட்டப்பட்டிருக்கும் ஜனாதிபதியின் படத்தை அகற்றிவிட்டு, அதற்குப்பதிலாக இந்தியப்பிரதமர் நரேந்திர மோடியின் படத்தை மாட்டுமாறு யோசனை முன்வைக்கின்றேன். ஏனெனில் இப்போது இந்தியாவிடம் தஞ்சமடைவதைத்தவிர வேறெந்த வழிகளும் இல்லாதுபோயுள்ளன. உலகநாடுகளின் சிறந்த அபிப்பிராயத்தை வென்றவர் என்று கருதி ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராக்குவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானமும் இப்போது தோல்வியடைந்திருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்க 'டீல்' மூலம் பிரதமராகப் பதவியேற்றுக்கொண்டபோதிலும், அந்த அரசாங்கத்தை செயற்திறனான முறையில் நிர்வகித்து முன்னோக்கிச்செல்லமுடியாத நிலையேற்பட்டிருக்கின்றது. – என்றார்.

## கிளிநொச்சி பிரதேச செயலகங்களுக்கு தமிழக நிவாரணப் பொதிகள் விநியோகம்





கிளிநொச்சி மாவட்டத்துக்கு ரயில் ஊடாக வியாழக்கிழமை கொண்டு வரப்பட்ட தமிழக அரசால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் இரவிரவாக பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

தமிழகஅரசாங்கத்தால்இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொதிகள் வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து பிரதேச செயலகங்களுக்கு விநியோகிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

ரயிலில் எடுத்துவரப்பட்ட உணவுப் பொதிகள்கிளிநொச்சிரயில்நிலையத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இறக்கப்பட்டு நான்கு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மாவட்டசெயலக அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலக, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் இணைந்து பொதிகளை இறக்கி ஏற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

4 ஆயிரத்து 450 பொதிகளில் 2 லட்சத்து 22 ஆயிரத்து 500 கிலோகிராம் அரிசியும் 50 பொதிகளில் ஒரு கிலோ கிராம் நிறையுடைய 750 பால்மா பைக்கற்றுக்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவை பிரதேச செயலகங்களூடாக 20 ஆயிரம் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 10 ஆயிரத்து 900 பயனாளிகளுக்கும் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 720 பயனாளிகளுக்கும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 380 பயனாளிகளுக்கும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரம் பயனாளிகளுக்குமாக மொத்தமாக 20 ஆயிரம் பயனாளிகளுக்கு இந்த நிவாரணப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 21 ஆவது திருத்தத்தின் வாக்கெடுப்பின்போது எம்.பிக்களின் வீடுகளில் மக்கள் கூடவேண்டும்

### தயாசிறி ஜயசேகர எம்.பி. கோரிக்கை



அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கியதை பாவச்செயலாகக் கருதுகிறேன். அரசமைப்பின் 21 ஆம் திருச்சட்டமூலம் மீதான வாக்கெடுப்பின் போது பொது மக்கள் தமது மக்கள் பிரதிநிதிகளின் வீடுகளுக்கு முன்பாக ஒன்று கூட வேண்டும் என நாடாளுமன்றஉறுப்பினர்தயாசிறிஜயசேகர தெரிவித்தார்.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் கொழும்பில் இடம்பெற்ற அரசியல் உறுப்பினர்கள், துறைசார் நிபுணர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின் போது கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட மூலவரைவில் பல சாதகமான அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வதற்கு பிரத்தியேகமான முறையில் அவதானம் செலுத்த வேண்டும்.

பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாற்றமடைந்து முழு அரசியல் கட்டமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசியல் கட்டமைப்பில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என பொது மக்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறார்கள்.

அரசியல் கட்டமைப்பிற்கான மாற்றத்தை அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தில் இருந்து ஆரம்பிப்போம். அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்துக்கு எதிராக செயற்பட்ட நான் அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கியதை ஒரு பாவச்செயலாகக் கருதுகிறேன்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தத்தை தோற்கடிக்க நாடாளுமன்றத்துக்குள்ளும், அரசியல் கட்சிக்குள்ளும் தனிப்பட்ட நிலைப்பாட்டை முன்னிலைப்படுத்தி சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது. அரசியல் சூழ்ச்சி தோற்கடிக்கப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் அரசமைப்பின் 21 ஆவது திருத்தச்சட்டமூல வரைவு மீதான விவாதத்தின் போது தமது பிரதிநிதிகளின் வீடுகளுக்கு முன்பாக ஒன்று கூடி அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பிலான தமது நிலைப்பாட்டை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். – என்றார்.

## போதைப்பொருளுடன் இளைஞன் கொழும்பு கிராண்ட்பாஸில் கைது!

கொழும்பு – கிராண்ட்பாஸ் பகுதியில் சட்டவிரோதமான முறையில் போதைப் பொருளை வைத்திருந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 27 வயதுடைய இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனவும் அவரிடமிருந்து 3 கிலோ 500 கிராம் அளவிலான ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பாகக் கிராண்ட்பாஸ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# சிங்கள, பௌத்த மேலாதிக்க நடவடிக்கையில் தொடர்ந்தும் பொதுபலசேனா ஈடுபடுகின்றது!

## அமெரிக்கா குற்றச்சாட்டு

சிங்கள பௌத்தமேலாதிக்கத்தை பரப்புவதற்காகவும் மத மற்றும் இன சிறுபான்மையினத்தவர்களை கொச்சைப்படுத்துவதற்காகவும் பொதுபலசேனா தொடர்ந்தும் சமூக ஊடகங்களை பயன்படுத்துகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

2021 இல் சர்வதேச மத சுதந்திரம் தொடர்பாகத் தனது வருடாந்த அறிக்கையில் அமெரிக்கா இதனைத் தெரிவித்துள்ளது.

பொதுபல சேனா போன்ற பௌத்த தேசியவாத குழுக்களால் வெளிப்படையாகத் தென்படும் வகையில் முன்னெடுக்கப்படும் சமூக ஊடக பிரசாரங்கள் சிறுபான்மைக்குழுக்களைஇலக்குவைத்துவன்முறையைத் தூண்டுகின்றன என சிவில் சமூக அமைப்புகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் இலக்கு வைக்கப்படுகின்றனர் என அவர்கள் தெரிவித்துள்ளனர் எனஅமெரிக்காதனதுஅறிக்கையில்தெரிவித்துள்ளது.

இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேசக் கூட்டணி 2021 இல் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீதும் போதகர்கள் மற்றும் அவர்களின் சபைகள் மீதும் இடம்பெற்ற 77 தாக்குதல்களைப் பதிவு செய்துள்ளது எனத் தெரிவித்துள்ள அமெரிக்கா, வழிபாடுகள் குழப்பப்பட்ட சம்பவங்களும்இடம்பெற்றுள்ளனஎனவும்தெரிவித்துள்ளது.

11 தடவை போதகர்கள், அவர்களின் சபைகள் அவர்களின் குடும்பத்தவர்கள், குழுவினர் தாக்கப்பட்டனர் என இலங்கையின் தேசிய கிறிஸ்தவ சுவிசேசக்கூட்டணி தெரிவித்துள்ளது.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம்அமைப்புகளும்அரசசார்பற்றஅமைப்புகளும் தங்கள்நடவடிக்கைகளைபொலிஸார்கண்காணிப்பதும் துன்புறுத்தல்களும் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளன என அமெரிக்காவின் மத சுதந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக இலங்கையின் பாதுகாப்பு படையினர் தொலைபேசி அழைப்புகளை மேற்கொள்கின்றனர். தங்கள் அலுவலகங்களுக்கு வருகை தருகின்றனர் என முஸ்லிம் அமைப்புகள் தெரிவித்தன என அமெரிக்காவின் மத சுதந்திர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜோன்ஸ்டனைக் கைது செய்ய நடவடிக்கை குருநாகல், கொழும்பில் பொலிஸார் தேடுதல்!



ஸ்ரீலங்காபொதுஜனபெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவைகைதுசெய்வதற்காக இரண்டு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குருநாகல் மற்றும் கொழும்புக்கு சென்றுள்ளனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி கோட்டா கோ கம மற்றும் மைனா கோ கம பகுதிகளில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட விவகாரத்தில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சந்தேக நபராக பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் சந்தேக நபர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் மஹிந்த கஹந்தகம உள்ளிட்ட நால்வரை சட்டமா அதிபர் திணைக்களம் சந்தேக நபர்களாக பெயரிட்டிருந்தது.

இந்தநிலையிலேயே ஜோன்ஸ்டனை கைது செய்யும் நடவடிக்கையில் குருநாகல் மற்றும் கொழும்பில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

## வெளிவிவகார அமைச்சு செயலரை சந்தித்தார் அமெரிக்கத் தூதுவர்!



வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தனவிற்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

'இலங்கையின் ஜனநாயக மற்றும் வளமான எதிர்காலத்தை பாதுகாக்குமாறு இலங்கை மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.'

எனவே இதற்காக அமெரிக்கா எவ்வாறு இலங்கைக்கு உதவ முடியும் என்பது தொடர்பில் இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது என ஜூலி சங் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, இலங்கையில் முதலீட்டை அதிகரித்தல் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிர்வாகத்தை ஆதரிக்கும் தங்கள் உறுதிப்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாட்டும் நானே? ...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது அந்த உண்மையை நிதர்சனமாய் நான் தெரிந்து கொண்டேன். தென்மராட்சிக்குச் செல்ல வேண்டிய தேவை ஒன்று ஏற்பட்டது. போகிற வழியில் தற்செயலாய் 'திருவாசக அரண்மனைக்குள்' சென்று தரிசிக்க முடிந்தது. அது ஒரு வியாழக்கிழமை. நூற்றுக்கணக்கானவர்கள் அங்குள்ள நூற்றிஎட்டுச் சிவலிங்கங்களுக்கும் குடம் குடமாகத் தண்ணீர் வார்த்துக் கொண்டிருந்தார்கள். அக்காட்சி உண்மையிலேயே சிலிர்க்க வைத்தது. வேறு எந்த ஆலயங்களிலும் காண முடியாத காட்சி இது.

அதே தினத்தில், திருவாசக அரண்மனைக்கு நேர் முன்னால் 'செஞ்சொற் செல்வர்' ஆறு.திருமுருகன் அவர்கள் பெருந்தொகைச் செலவில் கட்டி வைத்திருக்கும் 'அருங்காட்சியகமோ' (மியூசியம்) ஆள் அரவமற்று வெறிச்சோடிக் கிடந்தது. காரணத்தைச் சிந்திக்க, திருவாசக அரண்மனைக்கு மக்களை ஈர்த்துக் கொண்டிருந்தது அரண்மனையில் புதிதாய் அமைக்கப்பட்டிருந்த கிரியை வழிபாட்டு முறையேயாம் என்பது தெரிய வந்தது.

உண்மையில் என்னதான் கவர்ச்சி பண்ணினாலும், சாதாரண மக்களை, சமயக்கிரியைகள் பற்றி வைத்திருப்பது போல வேறு எதனாலும் மக்களைப் பற்றி வைத்திருக்க முடியாது எனும் உண்மையை அன்று நான் தெரிந்துகொண்டேன். வழிபாட்டில் கிரியைகள் அவசியமா? இல்லையா? என்று இப்போது நீங்களே சொல்லுங்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இவரும் 'ஆர்.எஸ்.எஸ்.'காரர் தானோ? ச்சும்மா... ச்சும்மா... ஹி..ஹி..ஹி..**



## வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

வடக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் வடக்கு மாகாணசபை பிரதம செயலக அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திகள் தொடர்பாக வடமாகாண ஆளுநரால் விளக்கம் அளிக்கப்பட்டது.

விவசாயம், மீன்பிடி, உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம், சுற்றுலாத்துறை போன்றவற்றை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தரவு ரீதியான விளக்கங்கள் இதன் போது அளிக்கப்பட்டன.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் சிவகுமார், வடமாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன் , உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன், வடமாகாண நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் முப்படை உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## "கோட்டா காஸ் தா"

### மக்கள் வீதி மறியல் போராட்டம்

ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு இன்றி தாம் பரிதவிக்கிறோம் எனவும், எனவே, தங்களுக்கு கூடியவிரைவில் சமையல் எரிவாயுவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும்நோர்வூட், புளியாவத்தை கடை வீதியில் வசிக்கும் மக்கள், நேற்று போராட்டத்தில் குதித்தனர்.

ஹட்டன் - சாஞ்சிமலை பிரதான வீதியை மறித்து, வீதி நடுவே 'வெற்று' சமையல்எரிவாயுசிலிண்டர்களை அடுக்கி வைத்து, பதாகைகளைத் தாங்கியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் அவ்வீதி ஊடான போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்தது. ஹற்றனில் இருந்து சாஞ்சிமலை, பொகவந்தலாவை உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்வதற்கு வந்த மக்கள் நீண்ட நேரம் வாகனங்களில் காத்திருந்தனர். பலர் மாற்று வழிகளைத் தேடி திரும்பி சென்றனர். பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

எங்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாக சமையல் எரிவாயு விநியோகிக்கப்படவில்லை. மண்ணெண்ணெய்யும் பகிரப்படவில்லை. நகரப்பகுதி என்பதால் விறகடுப்பு பயன்படுத்துவதிலும் ஆயிரம் தடைகள். இந்நகரில் லிட்ரோ சமையல் எரிவாயு முகவர்கள் மூவர் இருக்கின்றனர்.



அவர்களுக்குக்குறித்த நிறுவனத்தால் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவில்லை. இதனால் நாம் எல்லா வழிகளிலும் துன்பப்படுகின்றோம். எனவே, சமையல் எரிவாயுவை விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், சமையல் எரிவாயு வைக்கூட விநியோகிக்க முடியாமல் திண்டாடும் அரசுக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பினர். எரிவாயு வழங்குவதற்கான கூப்பன் தமக்கு வழங்கப்படாமைக்கும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு நோர்வூட் பொலிஸார் முற்பட்டனர். எதிர்வரும் 8ஆம் திகதிக்குப் பின்னர் சமையல் எரிவாயுவைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர். இதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. போக்குவரத்து நடவடிக்கையும் வழமைக்குத் திரும்பியது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.06.2022இல் வெளியிடப்பெற்றது